# பிள்ளைகள் இசைப்பா

யானைத் தாத்தா தேவன் பூதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு : ஜீவநதி & கலாலயம் பதிப்பகம்

முதற்பதிப்பு : 2023 கார்த்திகை

விலை : 250.00

பக்கம் : 12

ISBN

ஜீவநதி வெளியீடு - 298    கலாலயம் பதிப்பகம் - 8

பிள்ளைகள் இசைப்பா அரங்கு 03 பதிவுகள்

பிள்ளைகள் எமது பெருஞ் செல்வம். அவர்களின் உலகம் அற்புதமானது. இயற்கையையும் தங்களுடன் அருகில் வாழும் அன்புப் பிராணிகளையும் நேசிப்பர். பாசத்துடன் பழகுவர்.

அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கையர், நண்பர்களுடன் கூடிப்பழகுவதும் விளையாடுவதும் ஆடிப்பாடுவதும் அவர்களின் அன்றாடச் செயற்பாடு.

குழந்தைகளின் மழலை மொழி யாழினும் இனிது. அவர்களுடன் பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து பாடுவதும் ஆடுவதும் கூடிக்குலாவுவதும் ஆனந்தமானது.

இந்நூலுக்காக இப்பாடல்களை வழங்கிய குழந்தைக் கவிஞர் யானைத் தாத்தா தேவன் பூதனார் அவர்களுக்கும் ஜீவநதி க.பரணீதரன் அவர்களுக்கும் நாம் அனைவரும் நன்றி பாராட்டுவோம்.

புத்தகப் பண்பாட்டுப் பேரவை
சோ.தேவராஜா
இல. 68, நீதிமன்ற வீதி,
கலாலயம் பதிப்பகம்
மல்லாகம்.
2023.11.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவல் மச்சான்



சேவல் மச்சான் வாரும்
சேர்ந்து கூவப் பாரும்

வெள்ளைச் சிறகுடுத்து
கறுத்த வால் நிறத்து
செந்நிறக் கொண்டை பூண்டு
எங்கள் வீட்டுச் சுவரிலே
ஏறி அமர்ந்து கூவுறீர்

"கொக்கரக்கோ" என்று பாடி
கொறட்டை விட்ட என்னையேன்
விடி காலையிலே எழுப்புறீர்
எழும்ப மாட்டேன் எழும்ப மாட்டேன்
சேவல் மச்சான் பறந்து போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்காப் பிள்ளை



காக்காப் பிள்ளை காக்காப் பிள்ளை
காலைமயிலை வாறீர்
கண்டபடி கத்துறீர்
கன நேரமாய் கத்துறீர்

காக்காப் பிள்ளை காக்காப் பிள்ளை
பேத்தி இன்னும் எழும்பேல்லை
பேந்து பிந்தி வாரும்
அரிசி சோறு தருவா
அள்ளி அள்ளி வீசுவா

காக்காப் பிள்ளை காக்காப் பிள்ளை
பறந்து பறந்து பொறுக்கலாம்
வயிறு நிரம்பத் தின்னலாம்
வருந்தி வருந்தி கத்தாதீர்
வாயுளையப் பண்ணாதீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளைத் தாத்தா



தவளைத் தாத்தா வாருங்கோ
தந்தித் தத்திப் பாயுங்கோ
தாவித் தாவி வாருங்கோ
துள்ளிக் குதித்து நடியுங்கோ
- தவளைத் தாத்தா

றொக் றொக் றொக் றொக்
வுளக் வுளக் வுளக் வுளக்
குர்ர்... குர்ர்... குர்ர்... குர்ர்.
க்காக் க்காக் க்காக் க்காக்

தவளைச் சத்தம் கேக்கிது
தாளம் போட்டுப் பாடுது
ஆழத் தண்ணியில் போகு
குளக் கரையில் பாடுது

ஸ்க் ஸ்க் ஸ்க்க் ஸ்க்க்
ர்ர்ர்ர் ர்ர்ர்ர் ர்ர்ர்ர் ர்ர்ர்ர்
டக்டக் டக்டக் டக்டக் டக்ட
குவக் குவக் குவக் குவக்



மாரி மழைக்கு தவளை கத்துது
ஆரைத்தேடி ஆசையில் கத்துது
மழைநீர் கண்டு மனசு மகிழுது
ஊரும் உறவும் ஒன்றாய் சேருது
-றொக்... றொக்...

தவளைச் சத்தம் கேளுங்கோ
தாத்தா சொல்வதைக் கேளுங்கோ
தவளையைப் பார்த்துப் பழகுங்கோ
பாடி ஆடி மகிழ்வோம் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நாயார்



நாயார் நாயார் நல்ல நாயார்
நக்கி நக்கி நடனம் பயில்வார்
வாயால் சிணுங்கி வாலை ஆட்டுவார்
தாயாய் என்னைத் தடவி மகிழ்வார்
- நாயார்

பாட்டைப் பாடித் துள்ளிக் குதிப்பார்
வீட்டைக் காவல் காத்து நிற்பார்
நோட்டம் பார்த்து "வள்...வள்..." என்பார்
சேட்டைக் கள்வரைக் கண்டு கடிப்பார்
- நாயார்

நடந்து போனாய் பின்னால் வருவார்
நாக்குத் தொங்க ஓடி வருவார்
எனக்குத் துணையாய் எங்கும் வருவார்
நன்றியுள்ள நாயார்
நான் விரும்பும் நாயார்
- நாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கா... காக்கா...

காக்கா காக்கா
கறுப்புக் காக்கா
கா கா கா
கா கா கா
- காக்கா -

பாடி வா
பறந்து வா
கூடிப் பாட
கெதியாய் நீ வா
- காக்கா -

சுத்தஞ் செய்
சூழல் பேண்
சுற்றம் பார்
சூழ்ந்து வா
- காக்கா -



ஆளும் பேருமாய்
அன்பாய் வா வா
வாழும் வகையில்
ஒன்றாய் வா வா
கூழும் பகிர்ந்து
குடிப்போம் வா வா

வா வா வா
கா கா கா
-காக்கா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டுக்குட்டி



ஆட்டுக் குட்டி என்றை குட்டி
அருமை யான செல்லக் கட்டி
வாரும் விளை யாடு வோம்
வந்து துள்ளிப் பாடு வோம்
- ஆட்டுக்குட்டி-
மெஞ்ஞா மெஞ்ஞா மெஞ்ஞா
மேய்ஞ்சு புல்லுத் தின்னலாம்
ஆய்ஞ்சு குழை நான்தருவேன்
ஆசை யோடை உண்ணலாம்நீ
- ஆட்டுக்குட்டி-
அம்மா ஆடு தேடுறா உன்னை
அருகில் வரச் சொல்லுறா
பாய்ஞ்சு பாய்ஞ்சு பால்குடிப்பாய்
பொச்சடிச்சு அதை ருசிப்பாய்
- ஆட்டுக்குட்டி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனையார்



மியாவ் மியாவ் மியாவ் பூனையார்
மீசை யோடை வாறீர் பூனையார்
ஓசை யின்றி பதுங்கிப் படுக்கிறீர்
மேசை மீது ஏறிப் பாய்கிறீர்
- மியாவ் -

ஓடி ஓடி ஓடித் திரியிறீர்
ஆரைத் தேடி பாயப் பார்க்கிறீர்
ஆடி அசைஞ்சு வளைஞ்சு போகிறீர்
பல்லியைப் பாத்து பாய்ஞ்சு கௌவுறீர்
- மியாவ் -

ஆசையோடை என்னில் தாவுறீர்
குசினி யிலை பாலைக் குடிக்கிறீர்
கள்ள வேலை கனக்கப் பண்ணுறீர்
சொல்லமாட்டன் என்ரை பூனையார்
- மியாவ் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கா
கோ

# எனது வேலைகளை நானே செய்வேன்



எனது வேலைகளை
நானே செய்வேன்
எனது பாடங்களை
நானே படிப்பேன்
- எனது -

காலை எழும்புவேன்
பாட்டுப் படிப்பேன்
பல் துலக்குவேன்
முகம் கழுவுவேன்
- எனது

உணவை எடுப்பேன்
கோப்பையில் போடுவே
அள்ளி உண்பேன்
ஆசையாய் தின்பேன்
- எனது

ஆடைகள் அணிவேன்
புத்தகம் தூக்குவேன்
பள்ளிக்குப் போவேன்
பாடங்கள் படிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்கோ வாங்கோ வாங்கோ





அப்பாக்குட்டி வாங்கோ
ஆசையாக வாங்கோ
அம்மாக் குஞ்சு வாங்கோ
ஆசை முத்தம் தாங்கோ

அண்ணா தம்பி வாங்கோ
அக்கா தங்கை வாங்கோ
வாங்கோ வாங்கோ வாங்கோ
வடிவாய் ஆடுவோம் வாங்கோ

ஓடி ஓடி ஆடுவோம்
கூடி விளையாடுவோம்
பாடிப் பாடிக் கூடுவோம்
பம்பரமாய் சுளலுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உயிரம்மா



காற்றம்மா நீ யாரம்மா
காற்றம்மா நானுங்கள் மூச்சம்மா
தண்ணீர் நீரே நீ யாரம்மா
தண்ணீர் நானே உங்கள் உடலம்மா!
-காற்றம்மா-

ஆகாய வெளியே நீ யாரம்மா
ஆகாயமே நானுங்கள் ஆதாரமே
பூமாதேவியே நீ யாரம்மா
பூமாதேவி உங்களைப் பெற்றவள் நான்தானே!
-காற்றம்மா-

எரி நெருப்பே நீ யாரம்மா
நான் தான் உங்கள் வாழ்வம்மா
நீங்கள் எல்லோரும் யாரம்மா
உங்கள் உயிரே நாமம்மா
-காற்றம்மா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org